ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை.

ஸௌமிய வைகாசி

JUNE 1970



தொகுதி 32
பகுதி 6

Vol. 32
No. 6

ஆசிரியர் :
வைத்ய வாசஸ்பதி பண்டிட் P. S ராம சர்மா,

பிரசுரகர்த்தா :
வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

வருஷச் சந்தா
ரூ. 5/-

புதுப் பட்டதாரிகள் ... 125

கடி சூலம் - கடி கிரகம் ... 127

ஸஹஸ்ரயோகம் ... 132

Annual
Subscription
Rs. 5/-

காரியாலயம்: 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

# வைத்யரத்னம் P. S. வாரியருடைய

# ஆர்ய வைத்தியசாலா

## கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered Trade Mark.

தலைமை ஆபீஸ் போன்: கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ் ஆபீஸ் - மேனேஜிங் டிரஸ்டி - மானேஜர் தொடர்புடன் போன் நெ 31

| | |
|---|---|
| நர்ஸிங்ஹோம் | போன் நெ. 44 |
| தலைமை வைத்யர் | போன் நெ. 25 |
| மானேஜிங் டிரஸ்டி | (வீடு) போன் நெ. 27 |
| மானேஜர் | (வீடு) போன் நெ. 26 |

**சென்னை கிளை:**

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

**மற்ற கிளைகள்:**

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேலஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைதயரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜுபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

**மானேஜிங் டிரஸ்டி.**
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்.,

[ஸ்தாபிதம் 1939.]

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:
28, A. தென்னூர் ரோடு,
திருச்சிராப்பள்ளி-1.
Phone No. 3660

விற்பனை டிப்போ:
31, சின்னக் கடைத்தெரு,
திருச்சிராப்பள்ளி-2
Phone No. 4202

வைத்தியர்களுக்குத் தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும் சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்கள் மேற்பார்வையில் தயாரிக்கப் பெறுகின்றன.

வைத்தியர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும், சில்லரையாகவும் மருந்துகள் கிடைக்கும்.

## எமது விசேஷ புத்தக வெளியீடு-1.

எமது ஸ்தாபனத்தில் தயாராகும் மருந்துகளின் செய்முறையை விளக்கும்

## ஔஷத யோக ஸங்கிரஹம்

முதல் பாகம்

பிரதி விலை ரூ. 6-00. தபால் செலவு தனி.

விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்

T. S. ஈச்வரன், L.I.M. மானேஜிங் டைரக்டர்.

GRAM: KALIA

Phone: Off. 3232, Res. 4343

# KALIA BROTHERS (Regd.)

INDIAN DRUGS MERCHANTS

JULLUNDUR CITY. (INDIA)

| Price List | | Rs. ps. |
|---|---|---|
| Pure Musk per gram | | 50-00 |
| Pure Saffron | | 2-00 |
| Pure Gorochanam per gram | | 9-00 |
| Pure Pearls Spl. | ,, | 10-00 |
| ,, No. 2 | ,, | 7-00 |
| ,, No. 3 | ,, | 4-00 |
| Pure Ambar No. 1 | ,, | 3-50 |
| ,, No. 2 | ,, | 2-50 |
| ,, No. 3 | ,, | 2-00 |
| Pure Silver Leaves | ,, | 0-80 |

PACHAKARPURAM

| | | |
|---|---|---|
| Spl. Bhimseni per gram | | 0-30 |
| Singapuri (Yellow) | ,, | 0-25 |
| German or Japan | ,, | 0-20 |
| Powder Pachakarpuram | | 0-06 |
| Pure Menthol | ,, | 0-45 |
| Pure Thymol | ,, | 0-20 |
| Ashtavargam | per Kilo | 7-50 |
| Jiwak Rishwak | ,, | 2-50 |
| Meda Mahameda | ,, | 8-00 |
| Kakoli Kshir Kakoli | ,, | 8-00 |
| Ridhi Vridhi | | 12-00 |
| Silajit (Kalmodam) | | |
| Suryatapi Silajit No. 1 | ,, | 100-00 |
| No. 2 | ,, | 85-00 |

CRUDE DRUGS

| | | |
|---|---|---|
| Attis Bitter | ,, | 100-00 |
| Beedana | ,, | 20-00 |
| Guggulu Shudh | ,, | 12-00 |
| Gowela | ,, | 60-00 |

| Price List | | Rs. Ps. |
|---|---|---|
| Kuth No. 1 | per Kilo | 5-00 |
| Moosli White | ,, | 15-00 |
| Pushkar mool | ,, | 5-00 |
| Rose Flower Dry | ,, | 10-00 |
| Som Lata | ,, | 10-00 |
| Salib Panja | ,, | 85-00 |
| Salib Gatha | ,, | 20-00 |
| Shingraf | ,, | 300-00 |
| Tiger's Fat | ,, | 45-00 |
| Bears Fat | ,, | 40-00 |
| Pure Vanslochan | ,, | 80-00 |

AYURVEDIC MEDICINE

| | | |
|---|---|---|
| Chander Prabha | per Kilo | 70-00 |
| Chavan prash | ,, | 10-00 |
| Gudoochi Sattoo (Sindi Maw) | ,, | 12-00 |
| Ras Sindur | ,, | 300-00 |
| Shudh parad | ,, | 300-00 |
| Swaran Vang | ,, | 200-00 |
| Yogaraj Guggulu | ,, | 30-00 |
| Kaishore ,, | ,, | 30-00 |
| Maha Yogaraj ,, | ,, | 140-00 |
| Abrak Bhasam | ,, | 200-00 |
| KantLoh Bhasam | ,, | 85-00 |
| Loh Bhasam Special | ,, | 150-00 |
| Shring Bhasam | ,, | 35-00 |
| Sankh Bhasam | ,, | 30-00 |
| Mandur Bhasam | ,, | 35-00 |
| Silajit Bhasam | ,, | 35-00 |
| Silver Bhasam | ,, | 700-00 |
| Swaran Makshik | ,, | 80-00 |
| Sulphur Purified | ,, | 50-00 |
| Tamber Bhasam | ,, | 300-00 |
| Sidh Makar Dhwaj | per gram | 4-20 |
| Makar Dhwaj ordinary | | 0-80 |

**Please ask for detailed Price List 6¼% Commission to the readers of Vaidya Chandrika**

தந்தி: "அம்ருதம்" P. B. No. 1382. போன்: 26006

# ஸ்ரீ ஆர்ய வைத்திய பார்மஸி

## (கோயமுத்தூர்) லிமிடெட்,

தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18

**உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்.**

எங்களுடைய கிளைகள்:

| | | | |
|---|---|---|---|
| 1. | 23 B, பூஸா ரோடு, புது டில்லி : | போன் ; | 585687 |
| 2. | மொயிதீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1 | ,, | 2984 |
| 3. | கௌடியா மடத்தெரு, மதராஸ்-14 | ,, | 85752 |
| 4. | வளிஞ்ஞம்பலம், எர்ணாகுளம், கொச்சின்-18 | ,, | 32988 |
| 5. | பிள்ளையார் கோயில்ரோடு, கண்ணனூர்-1 | ,, | 92 |
| 6. | மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1 | ,, | 195 |
| 7. | கடைவீதி, பொன்னானி | ,, | 41 |
| 8. | ரௌண்ட் வெஸ்டு திருச்சூர்-1 | ,, | 378 |
| 9. | கோர்ட் ரோடு, ஆலத்தூர் | ,, | 87 |
| 10 | மெயின் ரோடு, கஞ்சிக்கோடு | | |
| 11. | ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18, | ,, | 33758 |
| 12 | இந்திரா பில்டிங் கள்ளிக்கோட்டை-2 | ,, | 4891 |
| 13 | 229 ராஜவீதி, கோயமுத்தூர்-1 | ,, | 33988 |
| 14. | T. T. 384 K. டெலிச்சேரி ரோடு கண்ணனூர்-2 | | |
| 15 | No. 263, 64 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னானி) | | |

பாக்டரி: கஞ்சிக்கோடு (கேரளா) (போன் : 2)

நர்ஸிங்ஹோம்: திருச்சி ரோடு, கோயமுத்தூர்-8. (போன்: 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் P. V. ராமவாரியர்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

## வாரியர்

# க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப் படுத்தும் :

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும் விருதாப்பியத்தினால் ஏற் படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML. ரூ. 7-00 ; 12 ML. ரூ 3-75

ஆரிய வைத்தியர் கே. எஸ். வாரியர் அவர்களின்

## அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE : 5441 வீடு போன் : 6074

[1936-ல் நிறுவப்பட்டது.]

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

## BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

உயர்ந்த கஸ்தூரி, குங்குமப்பூ,
பச்சைகர்ப்பூரம் முதலியவைகளுக்கு
மிகவும் சிறந்த இடம்.

Wholesale Dealers in:
Musk Saffron and Ayurvedic Drugs etc.

CORRESPOND IN HINDI OR ENGLISH

## Shri Markanday Musk Depot

(Regd.)

Importers and Exporters

Civil Lines, LUDHIANA, PUNJAB.

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்பூரம்,
குங்குமப்பூ முதலியவைகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHANOT BROTHERS
(REGD.)
Wholesale Musk, Saffron and Indian Drugs
Merchants,
LUDHIANA - PUNJAB
ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.,
MUSK MERCHANTS,
P. B. No. 17, LUDHIANA.
விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.




# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| தொகுதி 32 | ஸௌமிய வைகாசி | பகுதி ௬ |
| Vol. 32 | 1970 ஜூன் | No. 6 |


நமச் சிவகுமாராய.

॥ श्री धन्वन्तरये नमः ॥

उदेतु हृदयाकाशे गुरुवर्यकलानिधिः ।

यदीयचन्द्रिका वैद्यसंशयध्वान्तनाशिनी ॥

## புதுப் பட்டதாரிகள்

புது மாப்பிள்ளை, புது மனைவி, புது மனை, புது நண்பன் இவ்வாறான புதிய பொருள்களுக்கு எல்லாம் ஓர் மதிப்பும் ஆதரவும் உண்டு. உபயோகமற்ற பொருள்களாக இருந்தபோதிலும் நல்ல இடத்தை (ஆச்ரயத்தை) அடைந்தால் அதற்கு ஓர் தனிச்சிறப்பு ஏற்பட்டுவிடுகிறது. மகாராஜாவின் நெற்றியில் விழுந்த ஓர் சேற்றின் துளியை கஸ்தூரி திலகம் என்று ஒரு கவி வருணிப்பார். மிகவும் உபயோகமானவை புதியனதாகவும் இருப்பதோடு நல்ல ஆச்ரயத்தையும் அடைந்தால் ஈசன் தலையை அடைந்த சந்திரன் போல் பிறரால் போற்றப்படும்.

தற்சமயம் நமது தமிழ் நாட்டில் பல காலமாக எதிர்பார்த்த B. I. M. பட்டதாரிகள் தங்கள் கல்வி - பயிற்சி எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு வெளிவந்துள்ளனர். பொது ஜனங்களுக்கும் அரசாங்கத்திற்கும் அவர்களிடம் அதிக ஆதரவும் மதிப்பும் ஏற்பட வேண்டும். அரசாங்கம் இவர்கள் எல்லோருக்கும் தகுந்த உத்தியோகமும் அந்தஸ்தும் கொடுத்து ஆதரவு செய்தால்தான் இவர்கள் வாழ்க்கையை நிம்மதியாக நடத்தமுடியும். முதன்

முதலாக வெளிவந்துள்ள பட்டதாரிகளுக்கே ஆதரவு இல்லை என்றால் அந்தப் படிப்புக்கு மாணவர்கள் சேர்வதும் ஆதரவும் குன்றிப்போகும். படிப்பு எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும் அரசாங்க மதிப்பு இருக்கவேண்டும். இப் பட்டதாரிகளுக்கு அரசாங்க ஆஸ்பத்திரிகளில் உத்தியோகங்கள் தாராளமாகக் கிடைக்கும்படி செய்யவேண்டும். இவர்கள் பொது ஜனங்களின் நன் மதிப்பைப் பெற்றுத் தொழில் நடத்தி நல்ல பெயர் பெறுவது பல காரணங்களால் சிறிது கடினமாக இருக்கலாம்.

முதலாவதாக நடுத்தர அந்தஸ்து உள்ளவர்களும் ஏழைகளும்தான் இப்படிப்பு படிக்க அதிகமாக முன்வருபவர்கள். அவர்களுக்குத் தேவையான பண வசதி யில்லாமல் சொந்தமாகத் தொழில் நடத்தி முன்னுக்கு வருவதில் மிகவும் கஷ்டம் உண்டு அது என்னைப்போன்றவர்களின் அனுபவமாகும்.

தவிர நகரங்களில் அதிகமாகப் பட்டங்கள் பெற்ற நவீன டாக்டர்கள் ஏராளமாக இருக்கும்போது அவர்களின் நடுவே B. I. M. பட்டதாரிகள் போட்டிப்போட்டுத் தொழில் நடத்துவது அவ்வளவு சுலபமுமல்ல.

கிராமங்களில் உள்ள அரசாங்க வைத்திய விடுதிகளை சிறிது காலம் B. I. M. மூலமாகவே நடத்தி வரும்படி ஏற்பாடு செய்வதற்கு இது ஓர் நல்ல தருணமாகும். எந்தவிதத்திலும் இப் பட்டதாரிகளுக்குச் சோர்வு ஏற்படாமல் பார்த்துக்கொள்வது அரசாங்கத்தின் கடமையாகும்.

இந்நிலையில் மற்றுமொரு விஷயத்தை வலியுறுத்துவது நமது கடமையாகும். அதாவது தற்சமயம் உத்தியோகம் பார்த்துவரும் B கிளாஸ் வைத்யர்களை வெளியேறச் செய்து இந்த B. I M. பட்டதாரிகளை அமர்த்துவது என்பது கூடாது என்பதே.

பல ஆண்டுகளாக அனுபவமும் திறமையும் பெற்ற B கிளாஸ் வைத்தியர்கள் நன்றாகத் தொழில் நடத்துவதை நாமனைவரும் நன்கு அறிவோம். அவர்களுக்கு திரிசங்குவின் நிலை ஏற்படாமல் இருக்கவேண்டும்.

இவை எல்லாம் மிகவும் சுலபமாக நடக்கும் காரியங்கள் இல்லை. நவீன வைத்தியத்திற்குச் செலவிடும் பணத்தில் ஒரு சிறு துகை இருந்தால் இந்திய வைத்தியத்தைச் செழித்தோங்கச் செய்துவிடலாம். மனம்தான் சிறிது தாராளப் போக்கில் செல்ல வேண்டும். இந்திய வைத்தியத்தைத் தற்காலம் நன்றாக ஆதரவு செய்யாமல் விட்டுவிட்டால் பிற்காலம் ஓர் அபூர்வமான பொருளை நாம் இழந்தவர்களாக ஆவோம் என்பதை மறுமுறை ஞாபகப் படுத்திவிடுகிறோம்.

# கடி சூலம் — கடி கிரகம்

## (Lumbago — Fibrositis back)

Dr. வி. நாராயணசாமி, H.P.I.M.

முன்னுரை: கடி சூலம் அல்லது கடி கிரகம் என்னும் நோய், புராதன நூல்களாகிய சரக சம்ஹிதை, ஸுச்ருதசம்ஹிதை, அஷ்டாங்க ஹிருதயம் முதலிய புத்தகங்களில் காணப்படவில்லை. இருந்தாலும், 'கிரகம்' (பிடிப்பு) 'சூலம்', (வலி) என்கிற வார்த்தைகள் முதுகின் கீழ்புரத்தில் வரும் நோயிற்கு சொல்லப் பட்டிருக்கிறது. இந்த வலி, சில வாத வியாதிகளில் குறிகளாகவும், மற்றும் சிலபிணிகளில் உபத்திரவமாகவும், விவரிக்கப்பட்டிருக் கிறது. ஒருக்கால் ஆமவாதத்தைப் போன்று, இந்நோய் பழைய காலத்தில் அதிகமாக இல்லாதிருக்கலாம், அதனுல் அதனுடைய நிதானம், பூர்வரூபம், லக்ஷணம், சம்பிராப்தி வியாதி நிச்சயம் முதலியவைகளை விரிவாக விவரிக்காமலிருக்கலாம். அல்லது, மற்ற பூட்டுகளில் வரும் ஆகாரபரிணமஜ (metabolic diseases) நோய்களைப் போன்று வலியும், நீட்ட மடக்க முடியாமல் போகிற நோய்களைப் போன்று இதுவும் இருப்பதால் தனிப்பட விவரிக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதி இருக்கலாம். ஆனல் இக்காலத்தில் 40 வயதுக்குமேல் 50 வயதுக்குள்ளாக, பலபேருக்கு இந்நோய் காணப்படுவதால், இதை தனி நோயாகக் கருதி, இதனுடைய நிதானம், லக்ஷணம், சம்பிராப்தி, வியாதி நிச்சயம் முதலியவைகளை விவரிக்க வேண்டியிருக்கிறது.

விளக்கம்: முதுகின் அடிபாகத்தில் (கடி சுரோணி) அதிக வலியை உண்டாக்கும்; நடந்தாலோ குனிந்து நிமிர்ந்தாலோ வலி அதிகமாகும். இதை மூட்டு சம்பந்தப்படாத ஆமவாதம் என்று சொல்லலாம் (non-articular rheumatism). இதை ஆங்கிலத்தில் லம்பாகோ; என்றும் பைப்ரோசைடிஸ் என்றும் சொல்லுவார்கள். 'கடி' என்கிற சொல்லிற்கு இடுப்பு என்றும் 'கடி தடம்' என்கிற சொல்லிற்கு இடுப்பைச் சுற்றிய பாகம் என்றும் பொருள் கொள்ளவேண்டும். ஆயுர்வேத சாரீரப் பிரகாரம் இதற்கு சுரோணி என்கிற பர்யாயமும் உண்டு. 'கடி ப்ரோதஞ' என்பது அதற்கு கீழ் பாகம் (Buttacks), இதனல் அறிவது என்ன என்ருல் முதுகுப் புறத்தின் கீழ்பாகம் தான் கடி என்பதும், இதில் பூட்டுகள் சம்பந்தப்படவில்லை என்றும் அறி கிரேம். இதில் முதுகு எலும்புகள் சம்பந்தப்படவில்லை. இவ் விடத்திலிருக்கின்ற தசை நார்கள்தான் நோயுறுகிறது.

நிதானம் : இந்நோய் அநேக காரணங்களால் வரக் கூடும்

1. ஆமவாதத்தின் காரணத்தைப்போல் உணவு ஜீரணத்தில் பிழை யேற்பட்டாலோ, அல்லது தாது பரிணமத்தில் கெடுதல் ஏற்பட்டாலோ வரக்கூடும். இவைகள் மித்யா ஆகாரத்தாலும், (கெடுதலான உணவு) அல்லது அசாத்மிய ஆகாரத்தாலும் (பழக்க மில்லாத) வரக்கூடும் ஆமம் உண்டாவதற்கு இது ஒரு காரணம்.

2. முதுகின் அடிப்புறத்திற்கு பலவந்தமான வேலையை கொடுப்பது. இது மித்யா விஹாரம் என்று சொல்லப்படும். உதாரணமாக மோட்டார் வண்டியை பழுது பார்க்கிறவர்கள் எப்பொழுதும் குனிந்து கொண்டே வேலை செய்ய வேண்டி யிருக்கிறது. வீணை, வயலின் போன்ற தந்தி வாத்தியங்களை உபயோகிக்கின்றவர்கள் அதிகமாக ஒரே நிலையிலிருப்பதால் இவ் வியாதி வரக்கூடும், எந்த வேலையில் இடுப்பு அதிகம் வளையாமலேயே இருக்கிறதோ அல்லது அதிகம் வளைந்தும் நிமிர்ந்தும் செய்ய வேண்டியிருக்கிறதோ அதில் இந்நோய் வரக் கூடும். சீழ் பிடித்த பற்கள் டான்சில்ஸ், மலம் சரிவர இளகாம லிருத்தல், அல்லது குடலிலிருந்து உடலுக்குத் தேவைப்படாத பொருள்கள் உடலில் சேருதல் போன்றவை, கிரஹணீ ரோகம், பெருங்குடலில் புண் (Enterities colitis) போன்ற ரோகங்களில் இது வரக்கூடும். ஆனால் இவ்வியாதிகளில் வருகின்ற கடி சூலம் உபத்திரவமாகத்தான் கருதவேண்டும்.

லக்ஷணங்கள் : இந்நோய் சாதாரணமாக மத்திய வயதை அடைந்தவர்களுக்கும் சிறிது பருமனானவர்களுக்கும் தான் வருகிறது. இது திடீரென்று முதுகின் கீழ்புரத்தில் இருக்கப் பிடித்துக்கொண்டு வருகிறது. இரவில் நல்ல நிலையில் படுத்தவன் காலையில் எழுந்திருக்கும் போது வலியினால் எழுந்திருக்க முடியாதவனாக ஆகிறான் சிலசமயங்களில் அதிகமான பாரத்தைத் தூக்கக் குனிந்துப் பாரத்துடன் நிமிரும்போது இடுப்புப் பிடித்துக் கொள்ளுகிறது. அப்பொழுது ஏதோ ஒரு மாம்சபேசி அறுந்து வலி உண்டாகியதாகக் கருதுகிறான். சிறிது சிறிதாக வலி அதிகரித்து கடி தடம் முழுவதும் (Sacro lumbar region) பரவுகிறது. அவன் நேராக நடக்கமுடியும். குனியவோ, உட்காரவோ, திரும்பவோ முடியாமல் போகிறது படுக்கையிலும் கூட திரும்ப முடியாமல் போகும் அந்த இடத்தை அசைக்கும்படியான எந்த செய்கையும் வலியை அதிகரிக்கச் செய்கின்றது நோயின் தொந்திரவால் ஒரு சிடு சிடுப்பு ஏற்படுகிறது. மலம் போவதில்லை.

வியாதி நிச்சயம் : இந்த வியாதியை நிச்சயிப்பது சுலபம. ஆனால் முதுகெலும்பின் அடிபாகத்தின் நோயாலோ, சுரோணி

பலகம் சம்பந்தப்பட்ட எலும்பின் நோயாலோ (ilco sacral joints வந்தவையா என்பதை பரிசீலனை செய்ய வேண்டும். கடி கிரகம் அதிக நாளாக இருக்குமானல் எக்ஸ்ரே படம் எடுத்து இந்நோய் எலும்பு சம்பந்தப்பட்டவை இல்லை என்று நிச்சயித்துக் கொள்ள வேண்டும். அடிவயிற்றில் உண்டாகும் சில அற்புதங்கள் கூட (Intra pelvic tumors) இந்த இடத்தில் வலியை உண்டாக்கக் கூடும். முதுகெலும்பின் முட்டுகளில் வரக்கூடிய வலியையும் தேய்வுகளையும் (caries) நீக்கவேண்டும். இந்நோயின் ஆரம்பம், நீடித்த காலம், வருவதும் போவதும் சிகிச்சைக்கு உட்படுதல் முதலியவைகளை செவ்வனே ஆராய்ந்து வியாதி நிச்சயம் செய்ய வேண்டும். இந்நோய் கடி பிரதேசத்தை விட்டு வேறு இடத்தில் கீழ்பாகம் பரவாததானல் நரம்புகள் சம்பந்தப்பட வில்லை என்று அறிய வேண்டும்.

ஆராய்வு: இது ஆகாரபரிணம தோஷத்தால் ஆம வாதத்தைப் போன்று வருவதென்றும், சாதாரணமாக ஸ்தூல தேகிகளுக்கும், மத்திய வயதை அடைந்தவர்களுக்கும் வரும் என்றும் மேலே தெரிவிக்கப்பட்டது. இந்நோய் பெண்களுக்கு சாதாரணமாக ரஜஸ் நிற்கும் போது வரக்கூடும். ஆங்கில வைத்தியத்தில் இந்நோய்க்கு காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனல் இந்நோயில் மேதசின் சிறுசிறு பாகங்கள் கடி பிரதேசத் திலிருக்கிற தசைநார்களை ஆசிரயித்து பாகமற்ற வீக்கத்தை உண்டாக்குகிற தென்றும், இந்த வீக்கத்தினல் அவ்விடத்தில் வலி உண்டாகுகிறதென்றும் தெரிவிக்கிருர்கள் சில சமயத்தில் அவ்விடத்தில் அபிகாதம் ஏற்படுவதால் பாகமேற்பட்டு வீக்கம் உண்டாகிறதென்றும், அவ்வீக்கத்தினல் அவ்விடத்திலிருக்கின்ற மிருதுவான பேசிகள் கடினமடைந்து, இணைப்பு சதைகளின் நீட்டி மடக்கும் தன்மைகளைக் கெடுத்து வளைய நிமிர முடியாமல் ஆக்கு கிறதென்கின்றனர்.

ஆயுர்வேத சாஸ்திரப்பிரகாரம். அக்நியின் துர்பலத்தினல் ஆமம் உண்டாகி (நிதானம்) இந்த ஆமம், தனியாக அதிகரித்த வாதத்துடன் சேர்ந்து (சய) தன்னிடத்தை விட்டு வெளிக்கிளம்பி (பிரகோபம்) கடி பிர தேசத்தை அடைகிறது. (பிரசரம் ஸ்தான சம்சிரயம்) அந்ததேசம் பலக்குறைவாக இருப்பதால் ஆமமும் வாதமும் அங்கே அடைகின்றன. சென்று அடைந்தபிறகு, வலி, குனிய நிமிர முடியாமல் போதல் போன்ற குறிகளை உண்டாக்கு கின்றன (வியக்தி). இந்த இடத்தில் பிருஷ்ட வம்சத்தின் அடி பாகத்தில் இரண்டுபக்கத்திலும் கடீகதருண, என்றும் மர்மம் இருப்பதாக சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. இது அஸ்தி (எலும்பு) சம்பந்தப் பட்ட மர்மம். ஆகையால் கடி கிரகம் என்றும்

இந்நோய் மர்மம் சம்பந்தப்பட்டதில்லை. ஆனல் அக்நிகோப நியாயப்பிரகாரம் காய்ச்சின இரும்பு குண்டு அது இருக்குமிடத்தை மட்டும் கொளுத்துவதில்லை, மற்ற சுற்றுபுரத்தையும் கொளுத்தும் என்கிற ரீதியில் மர்மஸ்தானமும் சிறிது பாதிக்கப்படலாம்.

சிகித்சை: ஆயுர்வேத சாஸ்திரப்பிரகாரம், நோயின் காரணத்திற்கும், வியாதிக்கும், காரணம் வியாதி இரண்டிற்குமாக சிகித்சை செய்யவேண்டும். இதில் மருந்து பத்திய ஆகாரம், விகாரம் என்பவைகளையும் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும்.

காரணமாகிய ஆமத்தை உண்டாகாதவகையிலும், உண்டான ஆமத்தை பசனம் செய்யவும் வேண்டும். கீழே, சுமார் 40 நோயாளிகளுக்கு கொடுத்து பலன் கண்ட சிகித்சாவிதிகள் கொடுக்கப் படுகின்றன. நாள்பட்ட 4-5 மாதங்களுக்கு மேற்பட்ட நோயாளிகளுக்கு மதுதைலிகவஸ்தியும், மாத்ரா வஸ்தியும் கொடுக்கப் பட்டன (அஷ்டாங்க ஹிருதயம், கல்ப 4-27-அஷ்டாங்க-சூ 16-68). மேலே வாதஹரமான தைலங்களைத் தடவி, பத்திர பங்கஸ் வேதம், பிண்டஸ்வேதம் முதலியன செய்யப்பட்டது. முடிந்த வரையில் பத்மாசனத்தில் உட்காருவது பச்சி மோத்தானம் என்றும் யோகாசனத்தைப் பழகுவது விஹாரங்களாக (Physio therapy) செய்யப்பட்டன. மற்றும் உபயோகப்படுத்தப்பட்ட மருந்துகள் வயது, நோயின் நிலைமை, காலம் போன்றவைகளை அநுசரித்து கொடுக்கப்பட்டவை.

1. (a) க்ஷீரபலா (101) ஆவர்த்தித்தது. (b) மகாயோக ராஜகுக்குலு (c) வாத கஜாங்குசம் (d) வாதராக்ஷசம் (e) ராஸ் நாதிகஷாயம்-பிப்பலி சூர்ணத்துடன் (f) பலாரிஷ்டம் (g) தச மூலாரிஷ்டம்

2. (a) தான்வந்திர தைலம் (b) பலாகுடூசீ தைலம் c) ஆமவாதாந்தகம் மேல் பூசுவதற்கு.

3. மாத்ராவஸ்தி மது தைலிக வஸ்தியில் உபயோகித்த தைலங்கள்.

(1) ஹிங்குதிரி குணதைலம் (2) நாராயணதைலம் (3) க்ஷீரபலா தைலம்.

முடிவுறை: கடி சூலம், ஆயுர்வேத சாஸ்திரப்பிரகாரம் ஆம வாத ரோகத்தின் ஒரு பிரிவு அதனுல் தான் பழைய கிரந்தங்களில் அதிக விரிவாக விவரிக்கப்படவில்லை. வியாதியை நிச்சயிப்பது கடினமில்லை. அவ்விடத்திலிருக்கும் எலும்புகள் சம்பந்தப்படவில்லையா என்பதை கவனிக்க வேண்டும். இவ்

வியாதி மத்திய வயதிலும், பெண்களுக்கு ரஜஸ் நிற்கும்போதும் அதிகமாக் வரக்கூடியது. லக்ஷணங்கள் இவ்வியாதியிலும் லம்பாகோ என்றும் வியாதியிலும் ஒரே மாதிரியானவை. உள்ளுக்கு மருந்து கொடுப்பதுடன் மேலுக்கும் ஒத்தடம் கொடுக்கவேண்டும். நீண்டநாள் வியாதிக்கு யோகாசன பயிற்சியும் மேலே சொன்ன வஸ்திகளேயும் உபயோகிக்க அதிக நிரந்தர பலன் கிட்டும்.

---

## திரு. உத்தமராயன் புதியடைரக்டர்

திரு. C. S. உத்தமராயன் அவர்களே தமிழ்நாடு இந்திய மருத்துவ டைரக்டராக நியமித்திருக்கிருர்கள் என்ற செய்தி வைத்ய உலகில் மிகவும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளப் பெறும். பாளேயங்கோட்டை இந்திய மருத்துவக்கல்லூரியின் தலேவராகவும், இந்திய மருத்துவ மத்தியக் குழுவின் தலேவராகவும் அன்ஞர் மிகச்சிறந்த பணியாற்றியுள்ளார்கள். அண்மையில் நடந்த மதுரை மகாநாட்டில் அவர்கள் கலந்து கொண்டு நமக்குப் பெரிதும் வழிகாட்டி உதவியுள்ளார்கள். இந்தியவைத்தியத்தின் மறுமலர்ச்சிக்கான ஸ்திரமான பதிவு கல்வி ஆராய்ச்சி மருத்துவ உதவி திட்டங்களேயும் செயல் முறைகளேயும் நடை முறையில் கொணர்வார் என்ற பெருத்த எதிர்பார்வை நமக்கு உண்டு. இறைவன் அவர்கட்கு அந்த ஆற்றலேயும் வாய்ப்பையும் அளிப்பாஞக.

## திரு. உத்தமராயனுக்குப்பாராட்டு

மதுரை மகாமண்டலக்கிளே இந்திய மருத்துவ இலாகாவின் டைரக்டராகத் திரு. உத்தமராயன் புதிதாகநியமனம் பெற்றுள்ளதைப் பாராட்டிடக் கூட்டம் நடத்தியது. மதுரை மகாநாட்டிலும் அவர்கள் பங்கை எடுத்துக் கொண்டதற்கும் பாளேயங்கோட்டை இந்திய மருத்துவக் கல்லூரித் தலேவராகவும் இந்திய மருத்துவ போர்டின் தலேவராகவும இருந்து அவர்கள் ஆற்றிய பணியையும் பாராட்டிப் பலர் பேசினர்.

## மதுரை திரு. கோபாலன் வைத்தியரின் மறைவு

மதுரை மகாநாட்டிலும் பின் மஹாமண்டலக் கிளேத் துவக்கத்திலும் மற்ற பல வைத்ய சமூகப்பணிகளிலும் முக்கியப் பங்கேற்றுக்கொண்டிருந்த திரு. கோபாலன் வைத்தியர் அண்மையில் மறைந்ததை மஹாமண்டலம் மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறது. அன்ஞரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்தித்துக்கொள்கிறது; மதுரை மஹாமண்டலக் கிளேயும் இரங்கல் கூட்டம் நடத்தி அன்ஞரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்துக்கொண்டுள்ளது.

# ஸஹஸ்ரயோகம்

## ஸங்நிபாதத்தில் சிகித்ஸை

924. கோழிமுட்டைக்கருவும் முலைப்பாலும் வெண்ணெய்யும் சேர்த்துக் குழப்பி உச்சியில் தளம் போட ஸன்னிபாதம் தீரும்.

925 வெள்ளைப்பூண்டு, துரிசு, துத்தம், சன்னிநாயகம், லிங்கம், வெள்ளைப்பாஷாணம், மனோசிலை, இவைகளை ஊமத்தை இலை ரஸத்தில் அரைத்துத் துணியில் தடவி காயவைத்து வேப்பெண்ணெய்யில் தோய்த்து எரித்துப்புகையை மூக்கிலும் காதிலும் செலுத்தத் தீராத ஸன்னிபாதம் தீரும்.

926. வெண்காரம், ரஸம், இவைகளை மிதிபாகல் இலை ரஸத்தில் அரைத்துத் தாம்பிர பாத்திரத்திற்குள் தட்டி அதை ஒரு வாணுயில் கவிழ்த்து வைத்து சீலைமண் செய்து அதற்குமேல் மணல் பரப்பி அடுப்பில் வைத்து எரித்து நெல் பொரியக் கூடிய சூடு ஏற்பட்டவுடன் இறக்கிச் சூர்ணம் செய்து சமம் மிளகு சூர்ணம் சேர்த்து 2 டெசிக்ராம் இஞ்சிரஸத்தில் கொடு க ஸன்னி பாதம் தீரும்.

927. நொச்சி இலை, ஊமத்தை இலை, வாதக்கொடி இலை, இவை இடித்துப் போட்டு ஜலத்தில் கொதிக்க வைத்து அந்த ஜலத்தில் வேது பிடிக்க ஸன்னிபாதம் தீரும்.

928. ஊ த்தங்காய் மேல்பாகத்தில் வில்லையாக வெட்டி எடுத்து உள்விதை எல்லாம் விலக்கி பிறகு அந்தக்காயில் கருஞ் சீரகம் நிறைத்து வில்லையை போட்டு அடைத்துக் காடியில் வேக வைத்து எடுத்து நல்லெண்ணெயில் வறுத்து சிவப்பாக ஆகும் பொழுது எடுத்து அந்த எண்ணெயிலேயே அரைத்து விளக்கெண்ணெ வேப்பெண்ணெ வெண்ணெ பன்றிநெய் இவை சம்மாகச் சேர்த்துக்கலந்து துவளைபோட ஸன்னிபாதம், விடாக் காய்ச்சல், நரம்புத் தளர்ச்சி இளம் பிள்ளைவாதம் முதலியன தீரும்.

929 நீர்பூசணிக்காய், மருள்பூ, வெள்ளிலைதாளி இலை, ஆடாதொடை இலை, சீந்திற்கொடி, விஷ்ணுக்ராந்திசமூலம், வாதக்கொடி இலை, பூசணிஇலை, புளியம்துளிர், இவைகளை மோர் விட்டு இடித்துப் பிழிந்து நெல்லிக்காய் ரஸம் சேர்த்து ஸர்வாங்கம் தாரைசெய்ய ஸன்னிபாதம் தீரும்.

930. நெல்லிக்காய், எட்டிவேர், இவை கஷாயம் வைத்து மோர் கலந்து தாரைசெய்ய ஸன்னிபாதம் தீரும்

931. வெள்ளிலைதாளி இலை, நொச்சிக்காய், மோர், பூசணி இலை, கோரைக்கிழங்கு இவை சேர்த்து சிரோபஸ்தி, தாரை, தளம் முதலியன செய்ய தீரும்.

932. புல்லாணிதுளிர், புளியம்துளிர், தும்பையிலை, பூசணி இலை, பாலைஇலை, எல்லாம் சேர்த்து வேகவைத்துக் கண்ட ஸ்னானம் செய்ய ஸன்னிபாதம் தீரும். கோரைக்கிழங்கு கஷாயம் வைத்து சிரஸ்னானம் செய்யவும். ஆனால் சிரஸ்னானம் கபம் அதிகமான ஸன்னிபாதத்தில் செய்யக்கூடாது. வேப்பெண்ணை யைக் காய்ச்சி பிலாஇலையில் நனைத்து ஒவ்வொரு சந்தியிலும் தேய்க்க ஸந்திகஸன்னிபாதம் தீரும்

933 புளியங்காய், நெல்லிக்காய், கோரைக்கிழங்கு, இவை சமன் சேர்த்து வேகவைத்து மோரில் கலந்து அரைத்துக் குழந்தைப்பாலும் சேர்த்துக் குழம்பாகக் கொதிக்கவைத்து சிரஸ்ஸில் தளம் போடவும்.

934 கற்பூரவெற்றிலை, தும்பைப்பூ, ஆடாதோடை இலை, வாதக்கொடிஇலை, காஞ்சோரி இலை, விஷ்ணுக்கிராந்தி, கோரோசனை, புளியம்இலை, எட்டிக்கொட்டை, நொச்சிஇலை, நிலநாரகஇலை, இவை சமம் எடுத்து மோரில் வேகவைத்து வடிகட்டி அதில் வசம்பு, பூண்டு, கருஞ்சீரகம், சந்நிநாயகம், நிலவேம்பு, இவை பொடி செய்து குழப்பி கால் முதல் தலை வரையில் தேய்க்கவும் ஸன்னிபாதம் தீரும்.

935. விஷ்ணுக்கிராந்தி, சித்தாமுட்டிவேர், தேவதாரம், இவை பொடித்து விளக்கெண்ணை, வெண்ணை, எலுமிச்சம்பழ ரஸம், சேர்த்துக் குழப்பி பித்தஸன்னிபாதத்தில் சிரஸ்ஸில் போடவும். (பொதியவும்.) பஸ்திசெய்யவும்.

936. எலுமிச்சம்பழ ரஸத்தில் திரிகடு அரைத்துச் சாப்பிட ஸன்னிபாதம் தீரும்.

937. புளியம் ஈர்க்கைத்தேங்காய்ப்பாலில் அரைத்துத் தலையில் போடவும்.

938. கபம் அதிகம் இருந்தால் ஆடாதோடை இலையை அனலில் வாட்டிப்பிழிந்து ரஸம் எடுத்து ஆட்டுப்பால் கலந்து சாப்பிடவும்.

939 சுக்கு அல்லது வசம்பு அரைத்து காதிற்கு அடியில் தேய்க்கவும்.

940. நாக்கு உளருவதற்கு திப்பிலி, பவழம், கலைமான் கொம்பு, இவைகளைத் தேனில் அரைத்து நாக்கிற்கு அடியில் தடவவும்.

941. காட்டுத்துளஸிஇலையை வேப்பெண்ணெயில் தோய்த்து தூபம்போட வியர்வையுண்டாகி ஸ்ரோதஸ்ஸுக்கள் திறந்து கொள்ளும்.

942. கோரோசனை, கலைமான்கொம்பு, விலாமிச்சவேர், சந்தனம், இவைகளை இளநீரில் அரைத்து மார்பில் தேய்க்கவும்

943. முசல்முட்டை ரஸம் எடுத்துத் தாய்ப்பால் சமம் கலந்து எண்ணெ சேர்த்து வடித்து சந்துகளில் தேய்க்கவும்.

944 சதாவரீ, குன்னரிக்காய், கருநொச்சி, ஆடாதோடை இவைகளின் ரசம் எடுத்துத்தைலம் வடித்து உபயோகிக்கவும்.

945. புத்திரிச்சுண்டைவேர், ஆடாதோடைவேர், எருக்கம் வேர், முருங்கைவேர், புங்கம்பட்டை, ஆயில்யப்பட்டை, அகோரி வேர், நீலிவேர், நிலநாரகவேர், கூமுள், கொடுவேலி வேப்பம் பட்டை, தேவதாரம், தண்ணீர்விட்டான் கிழங்கு, குன்னிரிக்கா, குருந்தொட்டிவேர், கருநொச்சி, உறிக்கட்டி, முருங்கவேர், திப்பிலி, மூலம், கோரைக்கிழங்கு, தசமூலம், எல்லாம் சம இடை எடுத்து இடித்துக் கஷாயம் வைத்து வேப்பெண்ணெ, விளக் கெண்ணெ, தேங்காய் எண்ணெ, கடுகெண்ணெ, இவை எல்லாம் சேர்த்து நாலு பங்கு வெள்ளாட்டுப்பாலும் சேர்த்து பூநாகப், கந்தகம், திரிகடு, பூண்டு, மரமஞ்சள், முசல்முட்டை, கோரோ சனம், கருஞ்சீரகம், திரிபலை, சந்தனம், ஓமம், துரிசு, சன்னி நாயகம், நாபி, இவை கல்கம் சேர்த்து வடித்து நவத்துவாரங் களில் தேய்க்க ஸன்னிபாதம் தீரும். ஸன்னிபாதகுலாந்தகம் எனப்பெயர்.

946. ஆடாதோடை இலை பலம் 3, ஜலம் படி 3-ல் கஷாயம் வைத்து நாலில் ஒன்ருக வற்றவைத்து எண்ணெ படி 1, திரிகடு, ஜிரகம், கருஞ்ஜீரகம், கண்டுபாரங்கி (சிறுதேக்கு) ஓமம் அச்வ கந்தி, நிலவேப்பு கர்பூரம், இவை வகைக்கு தோலா 1, பொடித்து தூவி வடித்து கண்டூஷம், லேபனம் செய்யவும்.

947. விஷ்ணுகிராந்தி, மருள், அரசிலை, முசல்முட்டை, இவை இடித்து ரஸம் பிழிந்து திரிகடு, மரமஞ்சள் வசம்பு, கடுகு, ரோகிணி, மஞ்சள், இவை பொடிசெய்து வெள்ளாட்டுப்பால், எருமைப்பால், பிள்ளைப்பால், எண்ணெ இவற்றில் கலந்து காய்ச்சி நுரை வரும் பதத்தில் மோரும் சேர்த்து வடித்து மூக்கில் தேய்க்க தும்மினல் குணப்படும். தும்மல் வராவிட்டால் கஷ்டஸாத்ய மாகும்.

948. திரிகடு, சந்தனம், நன்னரி, இந்துப்பு, கருஞ்சீரகம், வெள்ளைக்காக்கனட்டான் வேர், மஞ்சள், மரமஞ்சள், கோழி முட்டை, வசம்பு, பூண்டு, திரிபலை, இவைகள் எல்லாம் சேர்த்து

அரைத்து ஆடாதோடை ரஸத்தில் கலந்து தாய்ப்பால் வேப் பெண்ணெ சேர்த்து அரைத்து நஸ்யம், பானம், நவத்வாரங்களில் தேய்த்தல் இவை செய்ய குணப்படும்.

949 பாதிரி, சித்திரமூலம், வெட்டிவேர், நொச்சித்தழை, காஞ்சோரிவேர், பேய்ப்புடல், சுக்கு, இந்தச் சரக்குகளைச் சேர்த்துக் கஷாயம் செய்து கொடுக்கஸன்னிபாதம் தீரும்.

950 ரஸம், கந்தகம், தாம்பிரம், இவைகளைச் சித்திரமூலக் கஷாயத்தில் அரைத்து வஜ்ஜிரமூஷையில் அடைத்து வாலு காயந்திரத்தில் எரித்து பூனை நரி இவைகளின் பித்தத்தினுல் 2 யாமம் பாவனைசெய்து குன்றுமணிஇடை கொடுக்க எல்லா ஸன்னிபாதங்களும் தீரும். பூதபைரவரஸம் என்று பெயர்.

951. வில்வவேர், பஞ்சகோலம், பேய்ப்புடல், குக்கில், ஒட்டடைக்கரி, இவை கஷாயம் வைத்துக் கொடுக்க தாந்திரிக ஸன்னிபாதம் தீரும்.

952. க்ஷாரத்ரயம், பஞ்சலவணம், தாம்பிரபஸ்மம், ரஸம், இவைகளை எருக்கம்வேர் கஷாயத்தில் மூன்று நாள் அரைக்கவும். பிறகு காயவைத்து வாலுகா யந்திரத்தில் வஜ்ஜிரமூஷையில் ஒரு நாள் எரித்து ஆறினபிறகு கழுதை பித்தத்தினுல் பாவனைசெய்து அதிமதுரக்கஷாயத்தில் உளுந்தளவு கொடுக்க தாந்திரிக ஸன்னி பாதம் உடன் தீரும். இதற்கு ஸோமபைரவரஸம் என்று பெயர்.

953 நொச்சிஇலை, சிறுவழுதினைவேர், வேப்பம்பட்டை, பூண்டு, மிளகு, திப்பிலி, கருசலாங்கண்ணி, இவைகளைக்கஷாயம் செய்து கொடுக்க சித்தவிப்ரம ஸன்னிபாதம் தீரும்.

954. ரஸம், மனேசிலை, கந்தகம், இந்துப்பு, தாம்பிரபஸ்மம், இவைகளைச்சிறு வழுதினைக் கஷாயத்தில் அரைத்துக் குளிகை செய்து மூஷையில் அறைத்து பூ புடத்தில் வாலுகா யந்திரத்தில் பாகம் செய்து ஆறினபிறகு குரங்கு பித்தத்தினுல் பாவனைசெய்து கடலை அளவு இளநீரில் கொடுக்க அல்லது திரிகடுவில் கொடுக்க சித்த விப்ரமம் தீரும்.

954. பில்வவேர், பாதிரிவேர், தக்காளிவேர், பேய்ப்புடல், இலந்தைக்கொட்டை, பர்பாடகம், கண்டங்கத்திரி, சுக்கு இவை கஷாயம்செய்து கொடுக்க கண்டகுப்ஜம் தீரும்.

955. வில்வவேர், மூக்கரட்டைவேர், சீந்திற்கொடி, பேய்த் தும்மட்டி, சித்திரமூலம், பர்பாடகம், கீரிபுரண்டான் (ஸர்பாக்ஷீ,) சுக்கு, இக்கஷாயத்தால் ருக்தாகம் தீரும்.

956. சித்திரமூலம், பூனைக்காலிவிதை, கருநொச்சிஇலை, பேய்ப்புடல், இலந்தைக்கொட்டை, பர்பாடகம், திரிகடு, இவை கஷாயம் வைத்துக் கொடுக்க அந்தக ஸன்னிபாதம் தீரும்.

957. நெரிஞ்சில்வேர், கருநொச்சி, செவ்வியம், கோரைக் கிழங்கு, பர்பாடகம், சுக்கு, அரத்தை, ய வை இவை கஷாயம் செய்து கொடுக்க புக்னநேத்திரம் தீரும்.

958. திரிபலை, பேய்ப்புடல், சித்திரமூலம், பாதிரிவேர், சுக்கு எருக்கம்வேர், இவை கஷாயம் செய்து கொடுக்க பிரலாபம் தீரும்.

959. கோரைக்கிழங்கு, கடுக்காய், சுக்கு முருங்கைப்பட்டை, அமுக்கிராக்கிழங்கு, குக்கில், இவை கஷாயம் செய்து பெருங்காயம் கலந்து சாப்பிடவும். சீதாங்க ஸன்னிபாதம் தீரும்.

960. ஸூசீமுகரஸம்-ரஸம், கந்தகம், தாளகம், மனோசிலை, மாக்ஷிகம், பாலதுத்தம், வாளம், நாபி, வெண்காரம், வில்வப் பழத்தின் உள்சதை, இவை சமஇடை எடுத்து ஒரு நாள் அரைத்து நல்ல பாம்பின் விஷத்தில் ஒரு நாள் பாவனைசெய்து காசிக்குப்பியில் அடைத்து வைத்து ஊசிமுனையால் எடுத்து உச்சியில் கீறி மருந்தை வைத்து அதற்குமேல் ஓட்டைக் காய்ச்சி வைக்க. ஸன்னிபாதத்தில் ஏழு நாளும் அந்தகத்தில் பத்து நாளும் ருக்தாஹத்தில் இருபது நாளும் சித்தப்ரமத்தில் இருபத்தோரு நாளும் சீதாங்கத்தில் பதினைந்து நாளும் கண்ட குப்ஜத்தில் பதின்மூன்று நாளும் ஜிஹ்வகத்தில் பதினாறு நாளும் கர்ணிகத்தில் மூன்று மாதமும் புக்னநேந்திரத்தில் ஐந்து நாளும் ரக்தஷ்டீ வத்தில் பத்து நாளும் தாந்திரிகத்தில் இருபது நாளும் அபின் யாஸத்தில் ஒரு பக்ஷமும் கால அளவாகும்.

குறிப்பு: கண்களில் உண்டாகும் நோய்களுக்கு நேத்ர ரோகங்களென பொதுப்பெயர் கண் என்பது ஐந்து பாகங்க ளாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. அவையாவன—வர்த்ம, ஸந்தி, ஸிதம், அஸிதம், திருஷ்டி, என்பவை. வர்த்ம என்றால் இமை களுக்கு ஆதாரமான இடம். ஸந்தி என்றால் இரண்டு இமைகளும் சேரும் பாகம். அவை இருவிதமாகின்றன. அவையாவன— அடிக்கண் அதாவது மூக்கின், ஓரத்தில் இமைகள் சேரும் இடம். நுனிக்கண். இவைஇரண்டிற்கும் முறையே வடமொழியில் கநீ

நிகா என்றும் அபாங்கம் என்றும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஸிதம் என்றால் வெள்ளைவிழி. அஸிதம் என்றால் கருவிழியின் நடுவிலுள்ள பாபா என்று சாதாரணமாக அழைக்கப் அழைக்கப்படும் பாகம். இந்த ஐந்து இடங்களில் தனித்தனி ஒவ்வொரு இடத்திலும் உண்டாகும் நோய்கள் இந்த அத்தியாயத்தில் சொல்லப்படுகின்றன. இதுதவிர பூரா கணகளிலும் சேர்ந்து உண்டாகும் வியாதிகளும் சொல்லப்படுகின்றன. அதற்கு ஸர்வாக்ஷிரோகங்கள் எனப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆக மொத்தம் ஆறு ஆறு ஸ்தானங்களில் கண்நோய் வருவதாக விவரிக்கப்பட்டிருக்கிறது. அதில் சுசுருதஸம்ஹிதையில் அடியில் கண்ட விதமாகப் பேதங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த ஆறு ஸ்தானங்களிலும் உண்டாகும் நேத்ர ரோகங்கள் மொத்தம் 76, அதற்கு விவரம்—வர்த்ம ரோகம் 21, சந்திரோகம் 9, ஸிதரோகம் 11, அஸிதரோகம் 4 திருஷ்டிரோகம் 12, ஸகலாக்ஷிரோகம் 17, பாஹ்ய ரோகம் 2, ஆக இவ்விதம் 76 ரோகங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் அஷ்டாங்க ஹிருதயத்தில் கண் நோய்கள் மொத்தம் 94 சொல்லப்பட்டிருக்கின்றன. அதற்கு விவரம்—வர்த்மரோகம் 24, ஸந்திரோகம் 9, ஸிதரோகம் 13, அஸிதரோகம் 5, திருஷ்டிரோகம் 27, ஸர்வாக்ஷி ரோகம் 16, ஆக 94 விதங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஸஹஸ்ர யோகத்தில் சொல்லப்படும் நயநரோகங்கள் அஷ்டாங்கஹிருதயத்தை யொட்டி இருக்கின்றன. ஆனால் ஸஹஸ்ரயோகத்தில் அச்சுப் பிழை முதலியவைகளால் சில வித்தியாசங்கள் காணப்படுகின்றன. அந்தப் பேதங்களைக் கீழே எழுதப்படும் குறிப்புகளில் காணலாம்.

— —

## தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம் மதுரைகிளை

மதுரையில் நடந்த தமிழ்நாடு ஆயுர்வேத மகாநாட்டை யொட்டி அமைக்கப் பெற்றிருந்த வரவேற்புக்குழு மகாநாடு முடிந்ததும் மஹாமண்டலத்தின் கிளை ஒன்றை அங்கு ஆரம்பித்துத் தன்னைக் கலைத்துக் கொண்டது. மகாநாடு நடத்துவதற்காக வசூலான தொகையில் மீதமானதை மகாமண்டலத்திடம் வரவேற்புக்குழு மஹா மண்டல நியமப்படி ஒப்படைத்ததை மகாமண்டலம் மதுரைக்கிளையின் ஆரம்ப நிதியாக அதை வைத்துக் கொள்ளுமாறு திருப்பித்தந்துள்ளது. மகாமண்டலத்தின் மதுரைக்கிளை மிகச்சிறப்பாக மாதாந்தரக் கூட்டங்களை நடத்தி வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

# PURI BROTHERS (REGD.)

**Musk, Saffron and Indian Drugs Merchants**

## JULLUNDUR-1

Tele: "VENKATESH" Phone: 3923

**PRICE LIST FOR 1970**

| | | Rs. P. |
|---|---|---|
| Pure Musk | per gram | 35-00 |
| Pure Saffron | ,, | 1-75 |
| Pure Gorochanam | ,, | 9-00 |
| Pu e Pearls special | ,, | 10-00 |
| Pure Pearls No, 2. | ,, | 8-00 |
| Pure Pearls No. 3. | ,, | 6-00 |
| Pure Amber No. 1 | per gm. | 4-00 |
| Pure Amber No. 2 | ,, | 3-50 |
| Pure Amber No. 3 | ,, | 3-00 |
| Pure Amber Black | ,, | 1-00 |

PACHAKARPURAM

| | | |
|---|---|---|
| Spl Bhimseni | per gram | 0-25 |
| Singapuri (Yellow) | ,, | 0-20 |
| German or Japan | | 0-20 |
| Ashtavargam | per Kilo | 14-00 |
| Jiwak Rishwak | ,, | 2-50 |
| Meda Mahameda | ,, | 8-00 |
| Kakoli Kashir Kakoli | ,, | 14-00 |
| Ridhi Vridhi | ,, | 12-00 |
| Suryatapi Silajit No. 1 | per Kilo | 100-00 |
| No. 2. | ,, | 85-00 |

BHASAMS

| | | |
|---|---|---|
| Rajit Bhasam | per K. G. | 1000-00 |
| Tamber Bhasam | ,, | 220-00 |
| Abhrak (100 times) | ,, | 230-00 |
| Abhrak (60 times) | ,, | 160-00 |
| Bang Bhasam | ,, | 160-00 |
| Akik Bhasam | ,, | 50-00 |
| Shilajit | ,, | 30-00 |
| Annabedi Bhasam | ,, | 30-00 |
| Swaran Makshika | ,, | 60-00 |
| Nag Bhasam | ,, | 120-00 |
| Pearl Bhasam | per ten gram | 100-00 |
| Parda Bhasam | ,, | 10-75 |

| | | Rs. P. |
|---|---|---|
| Hingul Bhasam | per ten gm. | 10-75 |
| Loh Bhasam (special) | per K. G. | 130-00 |
| Loh Bhasam No. 1 | ,, | 75-00 |
| Mandur Bhasam | ,, | 30-00 |
| Sankh Bhasam | ,, | 30-00 |
| Shring Bhasam | ,, | 30-00 |
| Vaikrant Bhasam | ,, | 180-00 |
| Hartal Godanti | ,, | 30-00 |
| Kant Loh Bhasam | ,, | 250-00 |
| Parwal Bhasam | ,, | 175-00 |

PILLS (GUTTIKA)

| | | |
|---|---|---|
| Agnitundi Vati | per ten gm. | 1-00 |
| Basant Kushmakar | ,, | 50-00 |
| Chander Odya Ras | ,, | 40-00 |
| Sanjeevani Vati | ,, | 6-00 |
| Eladi Vati | per K. G. | 35-00 |
| Echha Bhedi Ras | ,, | 60-00 |
| Kaf Ketu Ras | ,, | 50-00 |
| Kan Kayan Vati | ,, | 45-00 |
| Khadi Radi Vati | ,, | 45-00 |
| Lavangadi Vati | ,, | 120-00 |
| Mritunjaya Ras | ,, | 125-00 |
| Mandur Vati | ,, | 40-00 |
| Sankh Vati | ,, | 50-00 |
| Shul Gaj Kesar Vati | ,, | 80-00 |
| Nityodit Ras | ,, | 125-00 |
| Chander Prabha Vati | | 60-00 |
| Maha Jograj Guggal | ,, | 110-00 |
| Jograj Guggal | ,, | 35-00 |
| Kishore Guggal | ,, | 33-00 |
| Kanchanar Guggal | ,, | 35-00 |
| Raj Parsadani Vati | 30 pills | 1-00 |
| Mridu Virechan | 1000 ,, | 16-00 |
| Leucorhin | 1000 ,, | 50-00 |
| Kasari Pills | 1000 ,, | 30-00 |

5% Commission will be allowed on all orders received direct by us

# இம்ப்காப்ஸ்

## பூரண இயந்திர சாதன வசதியோடு சுத்தமான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளை தயாரிக்கிறது

இந்திய மருத்துவ முறையின்படி வைத்தியம் செய்யும் மருத்துவர்கள் 1944-ம் ஆண்டிலேயே முதன்முதலாகக் கூட்டுறவுக் கொள்கையின் அடிப்படையில் ஒரு மருந்து சாலையை நிறுவினர். சுத்தமான மருந்துகளை தயாரித்து ஆயுர்வேத, சித்த, யுனானி மருத்துவ முறைக்குச் சேவை செய்வதுடன், நம் நாட்டு மருந்து மூலிகைகளை ஆராய்ந்து, புராதன மருத்துவ வல்லுநர்கள் பின்பற்றிய முறையை ஒரு நிலைப்படுத்துவதே இதன் நோக்கம். இதில் நாங்கள் நம்பிக்கையோடு முன்னேறினோம். இப்போது நவீன இயந்திர சாதன வசதிகளுடன் மருந்துகளை பக்குவமாகத் தயாரிப்பதில் பூரணத்துவம் பெற்று மக்களுக்குத் திறமையாக சேவை புரிகிறோம்.

இம்ப்காப்ஸ் தேசமக்களை ஆரோக்கியமாகவும் வலிவுள்ளவர்களாகவும் இருக்க துணை செய்கிறது.

IMPCOPS

**தி இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.**

லாட்டிஸ் பிரிட்ஜ் ரோடு, அடையாறு, சென்னை-20


பிரபலமான கெமிஸ்டுகள் மற்றும் டிரக்கிஸ்டுகளிடம் கிடைக்கும்

மற்ற அலுவலகங்கள்:

4/186, மௌண்ட்ரோடு, மதராஸ்-2 போன்: 86520

48, தெற்குமாசி வீதி, மதுரை P.O.

27, காசிவிஸ்வேஸ்வரன் கோயில் தெரு, சுல்தான்பேட்டை, பெங்களூர்-2 (மைசூர் ஸ்டேட்)



maa/IMP./747/M-TA

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கை கண்ட பலனளிக்கும்

"சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக்கட்டிகளை

எந்நிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலு நிகரற்ற ஔஷத

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர். (S. Ry.)

Edited by Vaidya Vachaspati Pandit P. S. Rama Sarma, Published by Dr. T. S. Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2 Printed at Githa Press. Tiruchirapalli-2.